
# மெடிஷீல்டு கோரிக்கை




# நான் எப்படி கட்டுவது?

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கான **$3,000** மெடிசேவ் மானியத்தைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளையின் மெடிஷீல்டு சந்தாவை நீங்கள் கட்டலாம்.

**26** ஆகஸ்ட் **2012** அன்று அல்லது அதற்குப் பிறகு பிறக்கும் சிங்கப்பூர் குடியுரிமையுள்ள எல்லாக் குழந்தைகளும் மானியத்திற்குத் தகுதி பெறுவார்கள். குழந்தைகளின் பிறப்பைப் பதிவு செய்தவுடன் மானியம் அவர்களுக்குத் தானாகவே கிடைக்கும். மானியம் கணக்கில் சேர்க்கப்பட்டவுடன் பெற்றோர்களுக்குத் தகவல் தெரிவிப்புக் கடிதம் அனுப்பப்படும்.

## புதிதாகப் பிறந்த எனது குழந்தையின் தடுப்பூசிகள்பரிசோதனைகள் ஆகியவற்றுக்கு மெடிஷீல்டு உண்டா?

தடுப்பூசிகளும் பரிசோதனைகளும் மெடிஷீல்டு திட்டத்தில் இடம்பெறவில்லை. ஆனால், உங்கள் குழந்தையின் மெடிசேவ் மானியத்தைப் பயன்படுத்தி, மெடிசேவ் அங்கீகாரம் பெற்ற மருத்துவக் கழகங்களில் தடுப்பூசிகளுக்கும் பரிசோதனைகளுக்கும் நீங்கள் கட்டணம் கட்டலாம்.

மேல்விவரங்களுக்கு, தயவுசெய்து மத்திய சேமநிதிக் கழகத்துடன் **member@cpf.gov.sg** என்ற மின்னஞ்சல் முகவரியில் (அல்லது **1800-227-1188** என்ற எண்ணில்) தொடர்பு கொள்ளவும், அல்லது **www.cpf.gov.sg** இணையத்தளத்தைப் பார்க்கவும். மெடிஷீல்டு திட்டத்தைச் சுகாதார அமைச்சின் சார்பில் மத்திய சேமநிதிக் கழகம் நிர்வகிக்கிறது.


MINISTRY OF HEALTH
SINGAPORE

**College of Medicine Building**
16 College Road, Singapore 169854

**www.moh.gov.sg**


புதிய தாயார்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

# மெடிஷீல்டு

உங்களுக்குத் தேவையான விவரங்கள் அனைத்தும்





MINISTRY OF HEALTH
SINGAPORE

# மெடிஷீல்டு என்பது என்ன?

## பேரின்பமளிக்கும் உங்கள் குழந்தையின் வரவுக்கு நல்வாழ்த்துக்கள்!

பெற்றோர்கள் என்ற முறையில் நமது பிள்ளைகளுக்கு ஆகச்சிறந்தவை கிடைக்க வேண்டுமென நாம் விரும்புவது இயற்கை

மருத்துவமனைகளில் தங்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தும் வகையில் கைக்குழந்தைகள் நோய்வாய்ப்படக்கூடும் அல்லது பிறவிக் குறைபாடுகளால் பாதிக்கப்படக்கூடும் இக்கட்டான சூழ்நிலைகளைப் பெற்றோர்கள் எதிர்நோக்கக்கூடும். இதற்கு நீங்கள் எப்படி தயார்ப்படுத்திக் கொள்வது?




## 3Ms: மெடிசேவ், மெடிஷீல்டு மற்றும் மெடி॰:பண்ட்

அரசாங்கக் கட்டணச் சலுகைகளுக்குப் பிறகு மருத்துவமனை கட்டணங்களைக் கட்டுவதற்கு அனைவருக்கும் உதவுகின்றன.

### மெடிசேவ்

உங்களது மருத்துவமனை கட்டணங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகளின் கட்டணங்களையும் கட்டுவதற்கு உதவும் கட்டாய மருத்துவச் சேமிப்புத் திட்டம்.

### மெடிஷீல்டு

அதிகப்படியான மருத்துவமனை கட்டணங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகளின் கட்டணங்களையும் கட்டுவதற்கு உதவும் அடிப்படை சுகாதாரக் காப்புறுதித் திட்டம்.

இத்திட்டத்தின் சந்தாவை மெடிசேவ் சேமிப்பிலிருந்து கட்டலாம்.

குறைவான சந்தாவுடன், அதிகப்படியான கட்டணங்களிலிருந்து நாம் பாதுகாக்கப்படுகிறோம்.



### மெடி॰:பண்ட்

மருத்துவமனை கட்டணங்களைக் கட்டுவதற்குச் சிரமப்படும் சிங்கப்பூரர்களுக்கு உதவும் பாதுகாப்பு வலை. மருத்துவமனைகள், மருந்தகங்கள் மூலம் விண்ணப்பம் செய்யலாம்.

# மெடிஷீல்டு ஏன்?

- கட்டணச் சலுகையுள்ள பி2/சி படுக்கைப்பிரிவுகள், பொது மருத்துவமனைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநோயாளி சிகிச்சைகள் ஆகியவற்றின் அதிகப்படியான மருத்துவமனை கட்டணங்களைக் கட்டுகிறது. குழந்தைப்பிராயப் பிரச்சனைகளுக்கும் பிறவிக் குறைபாடுகளுக்கும் காப்புறுதி தரும்.
- ஒவ்வோர் ஆண்டும் உங்கள் குழந்தையின் மெடிஷீல்டுக்கு சிறிய சந்தா செலுத்தி பாதுகாப்பும் மனநிம்மதியும் அடையலாம்.
- உங்கள் அல்லது உங்கள் தாரத்தின் மெடிசேவ் சேமிப்பைப் பயன்படுத்தி உங்கள் குழந்தைக்கு மெடிஷீல்டு சந்தாவையும் நீங்கள் கட்டலாம்.

## மெடிஷல்டு காப்பட்டின் விளக்கம்




### கோரக்கூடிய அதிகபட்சத் தொகை

கட்டணத்தில் மெடிஷீல்டு கோருவதற்குத் தகுதி பெறும் பகுதி. இந்தத் தொகை படுக்கைப்பிரிவு வகை, தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கை, சிகிச்சை ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். இந்தத் தொகையில் மொத்த கட்டணமும், அல்லது அதில்ஒரு பகுதி உள்ளடங்கலாம்.

*எ.கா. நீங்கள் நாள் ஒன்றுக்கு* **$450** *(வழக்கமான படுக்கைப்பிரிவு) அல்லது நாள் ஒன்றுக்கு* **$900** *(தீவிர சிகிச்சைப் பிரிவு) கோரலாம்*

### கழிப்புத்தொகை*

உங்களுக்கு மெடிஷீல்டு வழங்கீடு கிடைப்பதற்குமுன் ஒவ்வொரு சந்தா ஆண்டும் நீங்கள் செலுத்தவேண்டிய நிலையான தொகை. சி படுக்கைப்பிரிவுக்கு **$1,500** தொகையும் பி2 படுக்கைப்பிரிவுக்கு **$2,000** தொகையும் கட்டவேண்டும்.

### இணைக் காப்புறுதி*

கழிப்புத்தொகை கட்டுவதோடு, கோரப்படும் தொகையில் நீங்கள் கட்டவேண்டிய விழுக்காடு. கட்டணம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அதற்கேற்ப இணைக் காப்புறுதியும் குறைவாக இருக்கும். கட்டண அளவு அதிகமாகும்போது, இணைக் காப்புறுதி **10%** முதல் **20%** வரை இருக்கும்.

**கழிப்புத்தொகையும் இணைக் காப்புறுதியும் போக, கோரப்படும் தொகையில் எஞ்சிய பகுதியை மெடிஷீல்டு கட்டும்.**

* இதை மெடிசேவ் சேமிப்பிலிருந்து மற்றும்/அல்லது ரொக்கமாகக் கட்டலாம்.

# எவற்றுக்குக் காப்பு உள்ளது?

- பி2 மற்றும் சி படுக்கைப்பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவு, சமூக மருத்துவமனைகள்* ஆகியவற்றில் தங்குவதற்கும் சிகிச்சை பெறுவதற்குமான கட்டணங்கள்
- அறுவை சிகிச்சை

**3 மார்ச் 2013 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த சிங்கப்பூர் குழந்தைகள் அனைவருக்கும்:**

- புதிதாகக் கண்டறியப்படும் பிறவிக் குறைபாடுகள் அல்லது பிரச்சனைகள் (எ.கா. உதடு வெடிப்பு, இதயத்தில் ஓட்டை, டௌன்ஸ் சின்ட்ரோம்)
- குழந்தைப்பிராயப் பிரச்சனைகள்


* தீவிர சிகிச்சையுள்ள மருத்துவமனைகள் பரிந்துரைப்பு செய்தால் மட்டுமே கோரலாம். திட்டத்தில் இடம்பெறும் உடல்நலப் பிரச்சனைகளின் முழுப் பட்டியலுக்கு, தயவுசெய்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தைப் பார்க்கவும் (**www.moh.gov.sg**).

## விரைவாக ஒரு கணக்கீடு...

திருமதி டானுக்குப்# பிறந்த ஆண் குழந்தை டிம்,# பிறவிக் கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால் சி படுக்கைப்பிரிவில் **30** நாட்கள் தங்கியிருக்க நேரிட்டது. அரசாங்கக் கட்டணத்ச் சலுகைகளுக்குப் பிறகு, டிம்மின் எஞ்சிய கட்டணத்தில் **70** விழுக்காட்டைக் கட்ட மெடிஷீல்டு உதவியது. திருமதி டான் தனது சொந்த மெடிசேவ் சேமிப்பைப் பயன்படுத்தி எஞ்சிய **$2,400** கட்டணத்தைக் கட்டினார்.

### கட்டண விவரம்

| | |
|---|---|
| அரசாங்கக் கட்டணச் சலுகைக்கு முந்திய மொத்த கட்டணம் | **$31,000** |
| அரசாங்கக் கட்டணச் சலுகை | **$22,900** |
| அரசாங்கக் கட்டணச் சலுகைக்குப் பிந்திய கட்டணம் | **$8,100** |




\# நோயாளியின் விவரங்கள் மாற்றப்பட்டுள்ளன